மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ம் நாள் செவ்வாய்க் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திரு.ஓ.சங்கர்தாஸ், உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 508/2018 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. மணி | வயது | .. |
| த/பெ. | .. மாசிலாமணி | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

01.12.2020 - வா.சா.1 குறுக்கு விசாரணை.

அல்ராஜ் என்பவருக்கு மொத்தம் 4 மகன்கள் என்றால் சரிதான். அவரது மனைவியின் பெயர் தனமதி அம்மாள் என்றால் சரிதான். இவர்களின் பிள்ளைகள் தான் 1. நாராயணசாமி, 2. கிருஷ்ணன், 3. ஏழுமலை, 4. கண்ணன் ஆவார்கள். 2வது நபரான கிருஷ்ணன் என்பவர் திருமணம் ஆகாமலேயே இறந்து விட்டார் என்றால் சரிதான். அ.வ.எண்.508/2018, அ.வ.எண்.124/2018 என்ற இரு வழக்குகளிலும் நான் தான் வாதி என்றால் சரிதான். அ.வ.எண்.508/2018 என்ற வழக்கில் பாண்டுரங்கன் என்பவரை 1ம் பிரதிவாதியாகவும், அவர்களது மகன்களை 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவ.எண். 124/2018 வழக்கில் பாண்டுரங்கன் என்பவரை மட்டும் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.508/2018ல் மின் இணைப்பில் பாதி பாகம் எனக்கு உள்ளது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.124/2018 வழக்கில் நிலத்தில் உரிமை விளம்புகை மற்றும் தடையுத்தரவு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மின் இணைப்பு ஆனது 3வது சகோதரர்ரான ஏழுமலை என்பவர் பெயரில் தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு பெற கொடுக்கப்படும் விண்ணப்பமும் ஏழுமலையின்

பெயரில் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.508/2018ல் வழக்குரையின் 1ம் பத்தியில் தனமதி அம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.24/4பி யில் மொத்த விஸ்தீரணம் 2.45 ஏக்கரில் 1.57 ஏக்கர் நிலத்தை விற்று அந்த தொகையைக் கொண்டு மின் மோட்டார் பொருத்தினார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 30 செண்ட் இடத்தினைத்தான் கிரையம் கொடுத்தார். வா.சா.ஆ.1 ஆன 10.6.1987 தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் சர்வே எண்.24/4பி யில் 2.45 ஏக்கரில் 1.57 ஏக்கர் நிலம் விற்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறாக உள்ளதா என்றால் சரிதான். அ.வ.எண்.124/2018ன் வழக்குரையில் பத்தி எண்.4ல் சர்வே எண்.24/7பி யில் 30 செண்ட் நிலத்தை ஒரு மாணிக்க கவுண்டர் என்பவருக்கு மின் இணைப்பு பெறுவதற்காகவும் மற்றும் மின் மோட்டார் பொருத்துவதற்காகவும் நிலம் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சர்வே எண் சரியாக எனக்குத் தெரியவில்லை. மேற்படி 30 செண்ட் நிலத்தை எந்த ஆவணத்தின் மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் 10.6.1987 தேதியிட்ட வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் மூலம் தனமதி அம்மாள் பெயரில் உள்ள சொத்தை கிரையம் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.1ம் தேதிக்கு பிறகு மின் மோட்டார், மற்றும் இதர உபகரணங்கள் வாங்கியதற்கான ரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2 வழக்குகளிலும் வெவ்வேறான சர்வே எண்கள், வெவ்வேறான விஸ்தீரணங்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் பொய்யான சங்கதிகளைக் கொண்டு தாக்கல் செய்துள்ள வழக்கு ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நாராயணசாமியின் மகன் ராஜேந்திரன் என்பவரும் கிருஷ்ணனும் சேர்ந்து வா.சா.ஆ.6ன் முன்னிலைக்கு எனக்கு ஒரு கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளேனா என்றால் சரிதான். அதில் சொத்து விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், மின் இணைப்பு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. குறிப்பிட்டிருக்கிறோம். நான் மின் இணைப்பு எண்.84 ஐ பற்றி குறிப்பிட்டு வா.சா.ஆ.6ல் கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியிருக்கிறேன். வா.சா.ஆ.6ல் ஏழுமலை, கண்ணன் ஆகியோர்களை விட்டு விட்டு கிரைய உடன்படிக்கை போட்டதற்கு

காரணம் கூற முடியுமா என்றால் அவர்கள் நால்வரும் தனித்தனியாக பாகம்



பிரித்துக்கொண்டதால் நாராயணாசமி மகன் ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் உடன் மட்டும் கிரைய உடன்படிக்கை செய்து கொண்டேன். என்னுடைய வழக்குப்படி வா.சா.ஆ.6 ஆன கிரைய உடன்படிக்கையில் பொதுவில் பாதி பாகம் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் ஏழுமலை மற்றும் கண்ணனை சேர்க்காமல் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டது தவறு என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை தேதியில் முன் பணம் ஏதேனும் செலுத்தினேனா என்றால் ரூ.15,000/- முன் பணம் செலுத்தினேன். கிரைய உடன்படிக்கையின்படி கிரையப்பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பாகவும், மாற்றுதிறனாளியான கிருஷ்ணன் என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ன் பின்புறத்தில் என்னிடம் பணம் பெற்றுக்கொண்டதற்காக நாராயணசாமி மகன் ராஜேந்திரன் என்பவர் மட்டும் தான் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். கிருஷ்ணன் என்பவர் கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். அவர் இறந்து விட்டார். வா.சா.ஆ.6ன் படி கிரையம் பேசி முடிக்கப்பட்ட தொகை ரூ.44,687.50 என்றால் சரிதான். கிரையத்தொகையில் முன்பணமாக ரூ.15,000/-ம் சேர்த்து அதற்கு பின்னாதாக 3 தவணையாக கொடுத்த தொகையையும் சேர்த்தால் ரூ.42,000/- வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.6ன் படி நாராயணசாமி மகன் ராஜேந்திரன் என்பவர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் வா.சா.ஆ.7 என்றால் சரிதான். வா.சா.ஆ.7ல் கிரையத்தொகையை ரூ.28,640/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிரையத்தொகை ரூ.45,000/-ம் தான் கிரையப்பத்திரத்தில் குறைத்து போட்டிருக்கலாம். வா.சா.ஆ.6 குறித்தும் கிரையத்தொகை ஏற்கனவே செலுத்தி விட்டது குறித்தோ வா.சா.ஆ.7ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. வா.சா.ஆ.6 குறித்தும் கிரையத் தொகை ஏற்கனவேகொடுத்து விட்டது குறித்தும் வா.சா.ஆ.7ல் குறிப்பிட்டு எதுவும் போடப்படாததால் வா.சா.ஆ.6 ஆனது வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் என்பவரை கைரேகை தான் வைப்பார். வா.சா.ஆ.6ல் உள்ள கைரேகை கிருஷ்ணனுடைய கைரேகை அல்ல என்றாலும் நாங்களாக தயார் செய்து கொண்டோம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6ல் சாட்சியாக ராஜகோபால், அண்ணாமலை, ரங்கநாதன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். ஊர்

கணக்க பிள்ளை எழுதினார். அவர் பெயர் தெரியாது. வா.சா.ஆ.6ல் சாட்சி கையொப்பமிட்டவர்கள் மற்றும் எழுதியவர் என அனைவரும் எனக்கு வேண்டியவர்கள்



என்றாலும் அனைவரும் சேர்ந்து மோசடியாக தாயரித்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆனது 24.8.1989ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் 3 மாத காலம் தவணைக்கு கால அவகாசமாக குறிப்பிட்டுள்ளது. காலவரையறை சட்டத்தின்படி வா.சா.ஆ.6 தேதியான 24.6.1989 மற்றும் 3 மாத கால தவணைக்கு பிறகு, அதிலிருந்து 3 வருடங்களுக்கு உள்ளாக அதாவது 24.11.1992க்குள்ளாக கிரையப்பத்திரம் ஏற்படுத்தபட்டிருக்க வேண்டும் ஆனால் காலம் கடந்து கிரையப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது சரியல்ல என்றால் சரியல்ல. 3 வருடங்கள் கடந்த பிறகு வா.சா.ஆ.6 ன் படியான வா.சா.ஆ.7 ஆவணம் எழுதப்பட்டது என்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. திருமணம் ஆகாமல் இறந்து போன கிருஷ்ணன் என்பவருக்கு முதல் வகுப்பு வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில் 2ம் வகுப்பு வாரிசுகளாக ஏழுமலை, மற்றும் கண்ணன் ஆகியோர் மட்டுமே மேற்படி கிருஷ்ணனின் வாரிசுகள் என்றால் சரியல்ல. இறந்த கிருஷ்ணன் என்பவரின் இறந்த சகோதரரான நாராயணசாமியின் மகனான ராஜேந்திரன் என்பவர் 2ம் வகுப்பு வாரிசுகளில் 4வது நிலையில் உள்ளதால் அவருக்கு மேற்படி கிருஷ்ணன் என்பவரின் சகோதரர்கள் இருக்கையில் உரிமை ஏதும் வராது என்றாலும் வாரிசு ஆக மாட்டார்கள் என்றாலும் சரியல்ல. எனவே, மேற்படி ராஜேந்திரன் என்பவர் இறந்து போன கிருஷ்ணனின் பங்கையும் சேர்த்து எனக்கு கிரையம் கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தின் வா.சா.ஆ.7 முன்னிலைக்கு தாக்கல் செய்துள்ள இந்த 2 வழக்குகளும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1990ல் வாய்மொழி பாகம் எற்பட்ட பிறகு ஏழுமலை மற்றும் கண்ணன் ஆகியோர் தங்களது பாகத்தை ஒரு கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு தனித்தனியான கிரையப்பத்திர முன்னிலைக்கு கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் 1990க்கு முன்பாகவே 1989ல் கூர் சீட் மூலமாக பாகப்பிரிவினை ஏற்பட்டு விட்டது. ஏழுமலை, கண்ணன் ஆகியோர் அவர்களுக்கு உரிமையில்லாத நான் கிரையம் பெற்ற சொத்தையும் சேர்த்து விற்பனை செய்துள்ளார்கள். மேற்படி கிருஷ்ணமூர்த்தி இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான பாண்டுரங்கன் என்பவருக்கு அவர் கிரையம் பெற்ற சொத்துக்களை கிரையம்

கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி பெற்ற சொத்தின் விஸ்தீரணம் சரியானது தான் என்றாலும் நான் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் தான் தவறானது என்றாலும் சரியல்ல. இரண்டு வழக்குகளிலும் உரிமையில்லாத சொத்துக்களுக்க உரிமை விளம்புகை



பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளுமே செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-D.Ravi,
District Munsif,
Polur.